## SUBORDINATE COURT, UTHANGARAI

| | | |
|---|---|---|
| **Original Suit No.** | : | **MCOP.No. 107/2022** |
| **Deposition of witness for** | : | **Respondent** |
| **Serial No. of Witness** | : | **RW.2** |
| **Name** | : | **திரு.மா.கோபிநாதன்** |
| **Father/Husband Name** | : | **திரு.மாதவராஜ்** |
| **Village** | : | **விஸ்வநாத நகர்** |
| **Taluk** | : | **தர்மபுரி** |
| **Age** | : | **38** |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 17th June - 2025** | | |

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணகராக பணிபுரிந்து வருகிறேன். என்னை சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் அத்தாச்சி வழங்கி உள்ளார்கள். அது எ.மா.சா.ஆ. 2 ஆகும். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையின் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். வழக்கு விபத்தில் ஈடு பாட்ட வாகனத்தின் பதிவு எண்கள் முறையே JCB வாகனத்தின் பதிவு எண் TN 24 J 3312 ஆகும். இருசக்கர வாகனம் பதிவு எண் TN 29 E 3038 ஆகும். மேற்படி வாகனத்தை விபத்தின் போது ஓட்டி வந்தவர் பெயர் நவின் தா.பெ. மனோகரன். விபத்து நடந்த தேதியில் இருசக்கர வாகனத்தை ஓட்ட ஓட்டுனர் உரிமம் நவினுக்கு இருந்ததா என்றால் இல்லை. அதே போல் மேற்படி இருசக்கர வாகனத்திற்கு விபத்தின் போது காப்பீடு இருந்ததா என்றால் இல்லை. மேற்படி இருசக்கர வாகனத்தின் பதிவு சான்று இருந்ததா என்றால் இல்லை. மேற்படி இருசக்கர வாகனத்தின் வாகன ஆய்வு அறிக்கை எ.மா.சா.ஆ.3 ஆகும். மேற்படி ஆய்வு அறிக்கையின்

படி இருசக்கர வாகனத்தின் பாதிக்கப்பட்ட பகுதி முன் முகப்பு விளக்கு மற்றும் சைகை விளக்கு, கைப்பிடி, சேதமடைந்துவிட்டது. மேலும் வாகனத்தின் வலதுபுற பகுதிகள் சிறு சிறு கீரல்கள் ஏற்பட்டு சேதம் அடைந்துவிட்டது. மேற்படி எங்கள் அலுவலகத்தில் மேற்படி இருசக்கர வாகனத்தை தணிக்கை செய்த தணிக்கை அறிக்கை தாக்கல் செய்கிறேன் அது எ.மா.சா.ஆ. 4 ஆகும். விபத்தின் போது JCB ஓட்டி வந்தவர் பெயர் சீனிவாசன். மேற்படி சீனிவாசனுக்கு விபத்து தேதியில் மேற்படி JCB ஓட்ட பேச் இருந்ததா குறிப்பில்லை. அவ்வாறு கனரக வாகனம் ஓட்டுவதற்கு பேச் இல்லை. இலகுரக வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இருந்தது. விபத்து தேதியில் பேச் இல்லை என்பதற்காக இணக்க தொகை ரூ.5000 செலுத்தி உள்ளார். மேற்படி தொகை செலுத்தியதற்கான ரசீது எ.மா.சா.ஆ.5 ஆகும். மேற்படி ஆவணத்தில் ஓட்டுனர் உரிமம் எண் இல்லை என ஆட்சேபணை செய்ததின்பேரில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்குவிசாரணை

JCB வாகனத்தின் வாகன ஆய்வு அறிக்கையில் DL not produced என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.மா.சா.ஆ. 5 ன் JCB ஓட்டுனர் பேச் இல்லை என்று குறிப்பிட்டு கூர வில்லை என்றால் சரிதான். கணினி ரசீது என்பதால் வரவில்லை. காம்போண்டின் அமோண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது தவிர உரிமம் இல்லை என என்பதற்காக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தொழில்நுட்ப வல்லுநர் இல்லை. ஆய்வு அறிக்கை வரிசை எண் 19 மற்றும் 20 ல் இடத்தை ஆய்வு செய்தால் தான் அதன் விவரம் குறிப்பிட முடியும் என்றால் சரிதான். அதில் வண்டியின் நீளம் விபத்து நடந்ததற்கான சூல்நிலை மற்றும் சாலையின் டயர் குறியீடு ஆகியவை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகன ஆய்வு அறிக்கையில் வாகனத்தை மட்டும் பார்த்துள்ளார்கள். அதனால் குறிப்பிடவில்லை. விபத்து நடந்த பின்பு எத்தனை நாட்கள் கழித்து வாகனம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றால் 8 நாட்கள் கழித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இருசக்கர வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுனர் உரிமம் காப்பீடு ஆகியவை முன்னிலை படுத்தவில்லை என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு சோதனை அறிக்கையில் குறிப்பிட்டவாறு இருசக்கர வாகனத்தில் பதிவு சான்று,

ஓட்டுனார் உரிமம் மற்றும் காப்பீடு சான்று காவல் நிலையத்தில் ஒப்டைத்தார்களா என்பதும் அதன் அடிப்படையில் அபராதம் செலுத்தினார்களா அல்லது அசல் ஆவணம் ஒப்படைத்தார்களா என்பது குறித்த பதிவேடு எடுத்து வரவில்லை என்றால் சரிதான். அழைப்பாணையில் குறிப்பிடவில்லை என்பதால் எடுத்துவரவில்லை. இன்றைய தேதி வரை மேற்படி இருசக்கர வாகனத்தின் பதிவு சான்று ஒப்டைத்தார்களா அபராதம் செலுத்தி உள்ளார்களா என்பது தெரியாது. இருசக்கர வாகனம் காவல்நிலைத்தில் உள்ளதா அல்லது உரிமையாளரிடம் ஒப்படைக்கபட்டதா என்பது எனக்கு தெரியாது. தொழில் நுட்ப வல்லுனர் இல்லை என்பதால் வாகன ஆய்வறிக்கை பற்றி நான் கூற முடியாது என்றால் சரியல்ல.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.